செய்தி வெளியீடு எண்:707 நாள்–1.11.2007

செய்தி வெளியீடு

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியிலிருந்து முதுகுளத்தூர் செல்லும் வழியில், அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தமிழ்நாடு மாநிலத் தலைவர் திரு.எம்.கிருஷ்ணசாமி அவர்கள், 29.10.2007 அன்று இரவு சுமார் 7.30 மணி அளவில் வேல் கம்பினால் தாக்கப்பட்டு, காயமடைந்துள்ள சம்பவம் குறித்து விரிவான முறையில் விசாரணை செய்து, அரசுக்கு அறிக்கை அளித்திட மூத்த ஐ.ஏ.எஸ். அலுவலராகிய வளர்ச்சி ஆணையர், சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் திரு. ஃபரூக்கி, அவர்களை விசாரணை அதிகாரியாக நியமனம் செய்து தமிழக அரசு இன்று (1.11.2007) உத்தரவிட்டுள்ளது. இதன்படி,

அ) அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தமிழ்நாடு மாநிலத் தலைவர் திரு.எம்.கிருஷ்ணசாமி அவர்கள் கலந்து கொள்ளவிருந்த கூட்டம் குறித்து விளம்பரப்படுத்தப்பட்டிருந்ததா என்றும்; மேற்படி கூட்டத்திற்குக் காவல் துறையின் முன் அனுமதி பெறப்பட்டிருந்ததா என்றும்;

ஆ) திரு.எம்.கிருஷ்ணசாமி அவர்களது பயணம் மற்றும் வழித்தடம் குறித்த விவரங்களைக் காவல் துறையினர் அறிந்திருந்தனரா என்றும்; அவ்வாறெனில், அது குறித்து காவல் துறையினரால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும்;

இ) பாதுகாப்பு சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளில் காவல் துறையினரின் கவனக் குறைவு இருந்தனவா என்றும்; அவ்வாறெனில் அதன் விவரங்கள் குறித்தும்;

ஈ) மற்றும் இந்நிகழ்வு சம்பந்தப்பட்ட இதர விவரங்கள் குறித்தும்;

விரிவான முறையில் உடனடியாக விசாரணை மேற்கொண்டு, அரசுக்கு 15 நாள்களுக்குள் அறிக்கை அளித்திட வேண்டுமென்று விசாரணை அதிகாரி திரு.ஃபரூக்கி அவர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

*****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.